X-5F　　　　　　ப.எண். [ ] [ ] [ ] [ ] [ ] [ ]　　　　T

# முழுப் பாடத்திட்டத் தேர்வு - 5

## பத்தாம் வகுப்பு

## தமிழ்

நேரம் : 3.00 மணி　　　　　　　　　　　　　　　　　மதிப்பெண்கள் : 100

அறிவுரை: 1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : i) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது.

ii) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I (மதிப்பெண்கள் : 15)

15x1=15

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. 'பாடு இமிழ் பனிக்கடல் பருகி' என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?

அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல்　　ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்

இ) கடல் நீர் ஒலித்தல்　　ஈ) கடல்நீர் கொந்தளித்தல்

2. இதழியலில் இயல்பான மொழிநடையை உருவாக்கும் மென்பொருள்

அ) வாட்சன்　　ஆ) வழிகாட்டி வரைபடம்

இ) வேர்டுஸ்மித்　　ஈ) பெப்பர்

3. குண்டலமும், குழைகாதும், ஆடுக இச்சொற்களுக்கான இலக்கணக் குறிப்பைக் கண்டறிக.

அ) எண்ணும்மை, வினையெச்சம்　　ஆ) எண்ணும்மை, வியங்கோள் வினைமுற்று

இ) முற்றும்மை, வினையெச்சம்　　ஈ) உம்மைத்தொகை, வியங்கோள் வினைமுற்று

4. 'தமிழினத்தின் பொதுச் சொத்து' என்று போற்றப்படும் நூல்

அ) கம்பராமாயணம்　　ஆ) மகாபாரதம்　　இ) சீவகசிந்தாமணி　　ஈ) சிலப்பதிகாரம்

5. 'தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும், தாயும் மகனுமாக இருந்த அரசன்' - என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள்

அ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர்　　ஆ) மிகுந்த செல்வம் உடையவர்

இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர்　　ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்

6. கள் விற்பவர் யார்?

அ) பரதவர்　　ஆ) உமணர்　　இ) பாசவர்　　ஈ) வலைச்சியர்

7. இரப்போர்க்கு ஈயாது வாழ்வதை விட உயிர் துறப்பது மேலானது என்று கூறும் அக நூல்

அ) கலித்தொகை　　ஆ) குறுந்தொகை　　இ) ஐங்குறுநூறு　　ஈ) பரிபாடல்

8. ஓர் உயிர் பல உடல்களில் ஊடுருவி உலாவுவது போல பாயும் நதியாகப் பாலகாண்டத்தில் குறிப்பிடப்படுவது

அ) சரயு　　ஆ) யமுனை　　இ) பிரம்மபுத்திரா　　ஈ) கங்கை

9. பொருத்தமற்ற ஒன்றினைத் தேர்வு செய்க.

அ) ஓஒதல்　　ஆ) உறாஅர்க்கு　　இ) படாஅபறை　　ஈ) தம்பீஇ

10. "பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்
வருவீர் உளீரோ" - என்று குறிப்பிடும் நூல் எது?

அ) நற்றிணை　　ஆ) குறுந்தொகை　　இ) பதிற்றுப்பத்து　　ஈ) பரிபாடல்

11. இடைச்சொல் தொடரில் இடைச் சொல்லுடன் தொடர்வது

அ) பெயர், வினா　　ஆ) வினா, விடை　　இ) பெயர், வினா　　ஈ) வினை, வினா

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

பெண்ணினைப் பாகம் கொண்ட பெருந்தகைப் பரம யோகி
விண்ணிடை மொழிந்த மாற்றம் மீனவன் கேட்டு வானோர்
புண்ணிய சிறியோர் குற்றம் பொறுப்பது பெருமை அன்றோ
எண்ணிய பெரியோர்க்கு என்னா ஏத்தினான் இறைஞ்சி னானே.

12. இப்பாடலின் ஆசிரியர் யார்?

அ) பெருஞ்சித்திரனார்　　ஆ) உமாமகேஸ்வரி　　இ) பரஞ்சோதி முனிவர்　　ஈ) குமரகுருபரர்

13. இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?
அ) திருவிளையாடற்புராணம் ஆ) நீதிவெண்பா
இ) பூத்தொடுத்தல் ஈ) கம்பராமாயணம்

14. 'மீனவன்' - என்பது யாரைக் குறிக்கிறது?
அ) இறைவன் ஆ) பெரியோர் இ) கபிலன் ஈ) பாண்டிய மன்னன்

15. யாருடைய குற்றம் பொறுப்பது பெருமை?
அ) சிறியோர் ஆ) பெரியோர் இ) மன்னன் ஈ) இறைவன்

**பகுதி - II (மதிப்பெண்கள் : 18)**

**பிரிவு - 1**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்:** 4x2=8

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.
அ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.
ஆ) நிகழ்கலைகள் மக்களுக்கு மகிழ்ச்சியெனும் கனிகொடுத்துக் கவலையைப் போக்குகின்றன.

17. கடலானது எவ்வெவற்றைத் தருவதாகத் தமிழழகனார் கூறுகிறார்?

18. செயற்கை நுண்ணறிவின் சிறப்பு யாது?

19. 'மீண்டும் பீடுஉயர்பு ஈண்டி, அவற்றிற்கும்
உள்ளீடு ஆகிய இருநிலத்து ஊழியும்' - தொடர் பொருள் விளக்குக.

20. மொழிபெயர்ப்பு முயற்சியை மேற்கொண்ட நிறுவனங்கள் யாவை?

21. செயற்கை ... எனத் தொடங்கும் குறளை எழுதுக.

**பிரிவு - 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** 5x2=10

22. கீழ்க்காணும் சொற்களின் கூட்டப்பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக.
கல், புல், பழம், ஆடு

23. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
வளி - வாளி, விடு - வீடு

24. "சீசர் எப்போதும் என் சொல்பேச்சைக் கேட்பான். புதியவர்களைப் பார்த்துக் கத்துவானே தவிர கடிக்க மாட்டான்" என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார் - இதில் உள்ள திணை வழுக்களைத் திருத்தி எழுதுக.

25. தண்ணீர்குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைச் சொற்களை விரித்து எழுதுக : தொடரில் அமைக்க.

26. 'நேற்று நான் பார்த்த அருச்சுனன் தபசு என்ற கூத்தில் அழகிய ஒப்பனையையும் சிறந்த நடிப்பையும் இனிய பாடல்களையும் நுகர்ந்து மிக மகிழ்ந்தேன்!" என்று சேகர் என்னிடம் கூறினான். இக்கூற்றை அயற்கூற்றாக எழுதுக.

27. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.
தமிழர் போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர் போர் அறம் என்பது வீரமற்றோர் புறமுதுகிட்டோர் சிறார் முதியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது

28. அமர்ந்தான் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

**பகுதி - III (மதிப்பெண்கள் : 18)**

**பிரிவு - 1**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க:** 2x3=6

29. தெருக்கூத்து குறிப்பு வரைக.

30. நோக்கம் கருதி அறம் செய்தல் கூடாது விளக்குக.

31. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

இன்றைக்குப் பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பு தேவைப்படுகிறது. மொழிபெயர்ப்பு இல்லை எனில் உலகை எல்லாம் வலையாகப் பிடித்திருக்கிற ஊடகத்தின் வளர்ச்சி

இல்லை. தொலைக்காட்சி, வானொலி, திரைப்படம், இதழ்கள் போன்ற ஊடகங்கள் மொழிபெயர்ப்பால் தான் வளர்ச்சி பெறுகின்றன. விளம்பர மொழிக்கு மொழிபெயர்ப்பு தேவைப்படுகிறது. இதனால் புதுவகையான சிந்தனைகள் மொழிக்கூறுகள் பரவுகின்றன.

**வினாக்கள் :**

1) மொழிபெயர்ப்பால் வளர்ச்சி பெறும் ஊடகங்கள் எவை?
2) மொழிபெயர்ப்பின் தேவை யாது?
3) விளம்பர மொழிக்கு எது தேவை?

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 34வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்:** 2x3=6

32. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?
33. மாறாத காதல் நோயாளன் போல்' என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.
34. **அடிபிறழாமல் எழுதுக:**
அ) 'தென்னன் மகளே'.... எனத் தொடங்கும் அன்னை மொழியே பாடல்

**(அல்லது)**

ஆ) 'செம்பொனடிச்சிறு'... எனத் தொடங்கும் முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் பாடல்

**பிரிவு - 3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க:** 2x3=6

35. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும் - இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.
36. அன்பிலன் ஆன்ற துணையிலன் தான்துவ்வான்
என்பரியும் ஏதிலான் துப்பு - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.
37. தீவக அணியை விளக்குக.

**பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க :** 5x5=25

38. அ) முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) கம்பராமாயணக் கதைமாந்தர்களுள் எவரேனும் ஒருவர் குறித்து எழுதுக.

39. அ) மாநில அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்' எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக. **(அல்லது)**

ஆ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

40. காட்சியைக் கவிதையாக்குக.



41. மேல்நிலை வகுப்பு - சேர்க்கை விண்ணப்பப் படிவத்தை நிரப்புக.

42. அ) நம் பழம் பெருமையையும் வரலாற்றையும் அறியச் செய்யும் அரிய ஆவணங்களைப் பராமரிக்கவும், பாதுகாக்கவும் உங்களால் இயன்ற செயல்களை எழுதுக. (அல்லது)

ஆ) மொழி பெயர்க்க :

1) Education is what remains after one has forgotten what one has learned in school - Albert Einstein.
2) Tomorrow is often the busiest day of the week - Spanish Proverb.
3) It is during our darkest moments that we must focus to see the light - Aristotle.
4) Language is the road map of culture. It tells you where its people come from and where they are going - Tita Mae Brown.
5) If you talk to a man in language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart - Nelson Mandela.

**பகுதி - V (மதிப்பெண்கள் : 24)**

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க:** 3x8=24

43. அ) அறக் கருத்துகளை வலியுறுத்தும் சங்க இலக்கியப் பாடலடிகள் ஐந்தினைத் தொகுத்து அவை கூறும் அறச் செய்திகளை எழுதுக.

(அல்லது)

ஆ) ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்று விடுமா? இக்கருத்துகளை ஒட்டிச் செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

44. அ) கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே - என்கிறது வெற்றி வேற்கை.
மேரியிடம் இருந்து பறிக்கப்பட்ட புத்தகம், சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடர் ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

(அல்லது)

ஆ) உங்கள் ஊரில் கடின உழைப்பாளர் - சிறப்புமிக்கவர் - போற்றத்தக்கவர் - என்ற நிலைகளில் நீங்கள் கருதுகின்ற பெண்கள் தொடர்பான செய்திகளைத் தொகுத்து எழுதுக.

45. அ) பள்ளி ஆண்டுவிழா மலருக்காக நீங்கள் நூலகத்தில் படித்த சிறுகதை நூலுக்கான மதிப்புரை எழுதுக. நூலின் மையப்பொருள் மொழி நடை வெளிப்படுத்தும் கருத்து - நூலின் நயம் - நூல் கட்டமைப்பு - சிறப்புக் கூறு - நூல் ஆசிரியர்.

(அல்லது)

ஆ) குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று தருக.
முன்னுரை - விண்வெளியில் தமிழரின் அறிவு - கல்பனா சாவ்லா - விண்ணியல் அறிவில் வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டியவை - முடிவுரை.

★★★★★